பக்கங்கள் நான்கு — விலை ரூபா/- 4-50

# முரசொலி

முரசு 05 ஒலி 100 பிரமோதூத மாசி 23 (07-03-1991) வியாழன்

### ஆட்சி அமைக்க காங்கிரஸ் மறுப்பு

## பொதுத்தேர்தல் மூலமாகவே புதிய அரசு அமைக்கக் கோரிக்கை

சந்திரசேகரின் ஆட்சி கவிழ்ந்ததைத் தொடர்ந்து புதிய அரசை அமைக்க இந்திரா காங்கிரஸ் மறுப்புத் தெரிவித்துள்ளது. தேர்தல் மூலமே புதிய அரசு தெரிவாக வேண்டும் என காங்கிரஸின் செயற்குழு நேற்று மாலை தீர்மானித்தது. இதேவேளை 513 உறுப்பினர்கள் கொண்ட இந்திய நாடாளுமன்றத்தில் 285 உறுப்பினர்கள் பொதுத்தேர்தல் நடாத்தப்பட்டு புதிய அரசு அமைய வேண்டும் எனத்தெரிவித்துள்ளனர். நேற்றிரவு தூரதர்ஷன் தொலைக்காட்சிக்கு அளித்தபேட்டியில் சந்திரசேகர்; "நான் பலாத்காரமாகவே பதவிகவிழ்க்கப்பட்டேன். சரியான தீர்ப்புப்பெற பொதுத் தேர்தலே ஒரேவழி எனக்குறிப்பிட்டார்.

# இந்தியப் பிரதமர் சந்திரசேகர்

# ராஜினாமா!



## நான்கு மாதம் ஆட்சி புரிந்த சிறுபான்மை அரசு

இந்தியாவின் ஒன்பதாவது பிரதமராக கடந்த நவம்பர் 10 ஆம் திகதி பதவியேற்ற 63 வயதான எஸ். சந்திரசேகர், நான்கு மாத ஆட்சியின்பின் தமது பதவியை ராஜினாமாச் செய்தார். நேற்றுப் பிற்பகல் ஜனாதிபதியைச் சந்தித்த அவர் ராஜினாமாக் கடிதத்தை உத்தியோக பூர்வமாகக் கையளித்தார்,

வி. பி சிங் அரசைக் கவிழ்த்து சந்திரசேகரை ஆட்சிபீடம் ஏற்றுவதில் சூத்திரதாரியாக விளங்கியது இந்திராகாங்கிரஸ் கட்சியே,

வளைகுடாப் போரில் ஈடுபட்டுள்ள அமெரிக்க யுத்த விமானங்களுக்கு எரிபொருள் வழங்கியது குறித்து சந்திரசேகருக்கும்ராஜீவ்காந்திக்கும் முரண்பாடு எழுந்ததும் ராஜீவ்காந்தியை இரு பொலிஸ் (உளவு) அதிகாரிகள் வேவு பார்த்தசம்பவத்தைபடுத்து இந்திரா காங்கிரஸ் சீற்றம் அடைந்து சில தினங்களாகப்பாராளுமன்றத்தைப் பகிஷ்கரித்து வந்ததும் தெரிந்ததே.

இடைக்கால வரவு செலவுத் திட்ட விவாத முடிவில் ஜனாதிபதியின் உரைக்கு

...04 ஆம் பக்கம் பார்க்க

## ராஜீவை உளவு பார்த்தமை
## பிரதமர் பதவி விலகலில் முடிந்தது

நேற்று இந்தியப் பிரதமர் சந்திரசேகர் பதவி விலகக் காரணமாக இருந்தது ராஜீவ் காந்தியை இரு பீஹார் உளவாளிகள் உளவு பார்த்தமையே.

இச்சம்பவம் குறித்து காங்கிரஸ் உறுப்பினர்கள் கடந்த இரு நாள்களாக பெரும் சர்ச்சைகளை பாராளுமன்றத்தில் கிளப்பினர்.

இதற்குச் சரியான நடவடிக்கையை அரசு எடுக்கும் வரை தாம் பாராளுமன்றத்தைப் பகிஷ்கரிக்கப் போவதாகவும் இந்திரா காங்கிரஸ் கட்சியினர் அறிவித்திருந்தனர்.

## பிரதமர் பதவி விலகியமைக்கு ராஜீவ் காந்தி வருத்தம்

சந்திரசேகர் பதவி விலக முடிவுசெய்தது வருந்தத்தக்கது என... புதிய அரசை அமைப்பது குறித்து காங்கிரஸின் முடிவு...

## தேர்தலில் காங்கிரசுக்கு ஆதரவு தர சந்திரசேகர் மறுப்பு

"இந்திய பாராளுமன்றத்திற்கு புதிய தேர்தல்களை நடாத்துவது குறித்து இன்று ஜனாதிபதி தனது முடிவை அறிவிக்கலாம் என சந்திரசேகர் தெரிவித்துள்ளார்."

தனது இராஜினாமாக் கடி

... 04 ஆம் பக்கம் பார்க்க

## காங்ரசிஸின் நம்பிக்கை துரோகமே சந்திரசேகரின் ஆட்சி கவிழ்ப்பு

இந்திரா காங்கிரஸ் கட்சியின் நம்பிக்கைத் துரோகமே பிரதமர் சந்திரசேகரின் ஆட்சி கவிழ்ப்பாகும் என ஜனதா தள் கட்சித் தலைவர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் தெரிவித்துள்ளார்.

... 04 ஆம் பக்கம் பார்க்க

## கொழும்பு குண்டு வெடிப்பில் தமிழர் ஒருவர் பலி; 6 பேர் காயம்

அண்மைய ஹல்லொக் வீதி கார்க் குண்டு வெடிப்பில் பலியான பொதுமக்களில் அடையாளம் காணப்பட்டவர்களில்... பத்திரிகையில் அனுமதிக்கப்பட்டுள்ள 73 பேரில் 6 தமிழர்களும் அடங்குவார்கள். சுப்பையா(ஹல்லொக் வீதி),...

### யாழ் பல்கலைக்கழகத்தின்

## 20 வீதமான வைத்திய மாணவரே வட, கிழக்கில் பணிபுரிகிறார்கள்

யாழ் பல்கலைக்கழக மருத்துவப் பீடத்திலிருந்து இதுவரை 5 பிரிவுகளிலிருந்து (Batch) 400க்கும் மேற்பட்ட வைத்திய மாணவர்கள் வெளியேறியுள்ளனர்.

இவ்வாறு வெளியேறியவர்களில் 20 வீதமான வைத்திய மாணவர்களே நாட்டுப்பற்றுடன் வட, கிழக்குப் பகுதிகளில் கடமையாற்றி வருகின்றனர் என பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

ஏனையோர் சுயலாபம் கருதி வெளிநாடுசென்று தரத்திலும் (M.B.B.S) குறைவான சேவையை ஆற்றிப் பணம் சம்பாதித்து வருவதாகவும் அவ்வட்டாரங்கள் கவலை தெரிவித்தன. (ப-11

## 'புளொட்' - பொலிஸார் வவுனியாவில் மோதல்

வவுனியா - தாண்டிக்குளம் சோதனைச் சாவடியில் பொலிஸாருக்கும் 'புளொட்' இயக்கத்தினருக்கும் இடையில் மோதல் இடம்பெற்றதாக அங்கிருந்து வந்தவர்கள் தெரிவித்தனர்.

பொதுமக்களைச்சோதனையிடும்போது ஏற்பட்ட வாக்குவாதம் பின்னர் கைகலப்பில் முடிந்தது. வெடிச் சத்தங்களும் கேட்டனவாம். (70)

## பலாலி ஷெல்தாக்குதல்

நேற்று நண்பகல் முதல் மாலைவரை பலாலியிலிருந்து வளளாய், தொண்டமானாறு பகுதிகளை நோக்கி பலத்த ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. சேத விபரங்கள் தெரிவிக்கப்படவில்லை. (38)

## கடற்படை தாக்குதல்

நேற்று அதிகாலை 3 மணி தொடக்கம் விடியும் வரை பருத்தித்துறை கடல் பகுதியில் நடமாடிய இலங்கைக் கடற்படையின் பீரங்கிப்படகு குடியிருப்புப் பகுதிகளை

... 04 ஆம் பக்கம் பார்க்க

## வடக்கே மின்சாரம் வழங்குமாறு அமைச்சின் செயலாளர் கடிதம்

வடபகுதிக்கு மின்சாரம் வழங்குவது பற்றி மின் சக்தி எரிபொருள் அமைச்சின் செயலாளர் பாதுகாப்பு அமைச்சுக்கு அனுமதி கோரிக் கடிதம் எழுதியுள்ளதாக மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வடபகுதிக்கு மின்சாரம்

— 4 ஆம் பக்கம் பார்க்க

### ஐ. நா. அகதிகளுக்கான

## தூதரக உயர்மட்டக் குழு விரைவில் கொழும்பு வருகிறது

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயத்தின் புனர்வாழ்வுப்பிரிவுகளை வடக்கு; கிழக்கில் ஏற்படுத்த வேண்டிய புதிய நடவடிக்கைகள் பற்றி ஆராய்வதற்காக ஜெனிவாவில் ... யில் கொழும்பு வரவுள்ளது.

வடக்கில் தற்போது தடைப்பட்டிருக்கும் வேலைகளை ஆரம்பிப்பது, அகதி முகாம்களின் நிவாரண விநியோகம் என்பனபற்றி இக்குழு பேச்சு

## பிரதமர் பதவி விலகியமைக்கு ராஜீவ் காந்தி வருத்தம்

சந்திரசேகர் பதவி விலக முடிவுசெய்தது வருந்தத்தக்கது என இந்திராகாங்கிரஸ் தலைவர் ராஜீவ்காந்தி தெரிவித்துள்ளார்,

புதிய அரசை அமைப்பது குறித்து காங்கிரஸின் மூத்த தலைவர்களுடன் தாம் ஆலோசனை நடாத்திவருவதாகவும் ராஜீவ்காந்தி குறிப்பிட்டார்.

## நான்காவது முறையாக பதவி கவிழ்ந்த சிறுபான்மை அரசு

பிரதமர் சந்திரசேகரின் சிறுபான்மை அரசின் 117 நாள் ஆட்சி நேற்றுடன் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்திய வரலாற்றில் ஓர் சிறுபான்மை அரசு பதவி கவிழ்வது இது நான்காவது தடவையாகும். 1969 இல் இந்திரா காந்தியின் அரசும், 1979 இல் சரண்சிங்கின் அரசும், 1989 இல் வி. பி. சிங்கின் அரசும் பதவி கவிழ்க்கப்பட்ட சிறுபான்மை அரசுகளாகும். 1991-3-6ஆம் திகதி நண்பகலுடன் சந்திரசேகரின் சிறுபான்மை அரசும் பதவி கவிழ்க்கப்பட்டுள்ளது.

## இந்திய பொதுத்தேர்தலுடன் 4 மாநில தேர்தல்களும் நடைபெறும்

இந்திய பாராளுமன்றத்துக்கு புதிய தேர்தல்கள் நடாத்தப்பட தீர்மானிக்கப்பட்டால் அத்தேர்தல்களுடன் தமிழ்நாடு, பஞ்சாப், காஷ்மீர், அஸாம் மாநில சட்டப் பேரவை தேர்தல்களும் நடைபெறலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழ்நாட்டுக்கான தேர்தல் மே மாதத்தில் நடைபெறலாம் என சென்னைச் செய்திகள் தெரிவித்தன.

எனினும் புதிய பாராளுமன்றத்தேர்தலினால் ஏனைய நான்கு மாநிலங்களில் சட்டப் பேரவை தேர்தல்கள் பின் போடப்படலாம் என ஒரு சாரார் கருதுகின்றனர்.

## தமிழர் ஒருவர் பலி; 6 பேர் காயம

அண்மைய ஹல்லொக் வீதி கார்க் குண்டு வெடிப்பில் பலியான பொதுமக்களில் அடையாளம் காணப்பட்டவர்களுள் பி இராமன் (பம்பலப்பிட்டி) என்ற தமிழரும் ஒருவராவர்.

இதேவேளை இக்குண்டு வெடிப்பில் காயமுற்று ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள 73 பேரில் 6 தமிழர்களும் அடங்குவார்கள். சுப்பையா (ஹல்லொக் வீதி), ரவிஸல் ராஜரத்தினம் (கொழும்பு), லட்சுமணன் (அட்டன்), எம். ரவீந்திரன் (வெள்ளவத்தை), ஏ. ஆர்.

... 04 ஆம் பக்கம் பார்க்க

## ரஞ்சனின் இறுதி ஊர்வலத்தில் அதிகமானோர் இராணுவத்தினரே

குண்டு வெடிப்பில் மரணமடைந்த முன்னாள் பாதுகாப்பு இணையமைச்சர் ரஞ்சன் விஜேரட்னவின் இறுதிச் சடங்குகள் நேற்றுப் பூரண இராணுவ மரியாதையுடன் நடைபெற்றுள்ளன.

அமைச்சரின் பேழை இராணுவப் பீரங்கி வண்டியில் வைத்து சுதந்திரச் சதுக்கத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது. மாலையில் இதைக்கு மகன் தீ வைத்தார்.

இதேவேளை நேற்று நடைபெற்ற அமைச்சர்ரஞ்சனின் இறுதிஊர்வலத்தில்பொதுமக்களை விட இராணுவத்தினரே அதிகமாகக் காணப்பட்டனர்.

## பாதுகாப்பு அமைச்சராக பிரதமர் டி.பி. விஜேதுங்க

பாதுகாப்பு இணையமைச்சராக பிரதமர் டி. பி. விஜேதுங்க நியமிக்கப்பட்டுள்ளார். பிரதமர் விஜேதுங்க நிதியமைச்சர் பொறுப்புடன் பாதுகாப்பு இணையமைச்சராகவும் பணிபுரிவார்.

ஐ. தே. க. வின் பொதுச் செயலராக விடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் சிறிசேனா கூரே முன்னதாக நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அதிகளுக்கான ஐ... நாடுகள் உயர் ஸ்தானிகராலயத்தின் புனர்வாழ்வுப்பிரிவுகளை வடக்கு; கிழக்கில் ஏற்படுத்த வேண்டிய புதிய நடவடிக்கைகள் பற்றி ஆராய்வதற்காக ஜெனிவாவில் இருந்து நான்கு பேர் கொண்ட உயர்மட்டக் குழு ஒன்று இம்மாதம் நடுப்பகுதியில் கொழும்பு வரவுள்ளது.

வடக்கில் தற்போது தடைப்பட்டிருக்கும் வேலைகளை ஆரம்பிப்பது, அகதி முகாம்களின் நிவாரண விநியோகம் என்பனபற்றி இக்குழு பேச்சு நடத்துமென விடயம் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (74)

## கொழும்பில் பாதுகாப்பு நடவடிக்கை அதிகரிப்பு

அமைச்சர் ரஞ்சன் கொலை மற்றும் குண்டுவெடிப்புச்சம்பவத்தையடுத்து கொழும்பில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

கொழும்பு நகருக்குள் வரும் வாகனங்கள் எல்லைப்பகுதியில் வைத்து கடுமையான சோதனைக்கு உள்ளாக்கப் படுகின்றன.

நகரில் வீதிகளில் ஆட்கள் இல்லாது நிறுத்தப்படும் வாகனங்கள் மீது அதிக கவனம் செலுத்தப்படுவதாகவும் குறிப்பிட்டமணிநேரத்துக்குப் பின்னர் நிறுத்தப்படும் வாகனத்தின் சாரதி விசாரிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப் படுகிறது. (71)

## 100 பேர் கொண்ட பொலிஸ் படை கொலையாளிகளைத் தேடுகிறது

அமைச்சர் ரஞ்சன் விஜயரட்னவின் கொலையாளிகளைக் கண்டு பிடிக்க நூறு பேர் கொண்ட பொலிஸ் பிரிவு ஒன்று சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

ஆனால் இதுவரை இது தொடர்பாக எவரும்கைதாகவில்லை எனவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

குண்டுவெடிப்பு நடந்த போது இராணுவத் தலைமையக ஹமில்டன் வனசிங்காவின் இல்லத்தின் முன்பாக ஓடிக் கொண்டிருந்த பெண்மணி ஒருவர் கைதாகியுள்ளார்.

## சிறு விளம்பரம்


**புத்தகம்**

இதுதான் முடிவு (சமூக நாடகம்) இலங்கைக் கலைக்கழகப் பரிசு பெற்றது. ஆக்கியோன் நாகலிங்கம் இரசரத்தினம் B. A. விலை ரூபா 25/- விற்பனையாளர்: பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம். 03026

**பரீட்சை**

O/Lவிசேடபரீட்சை1991 மாணவர் உபயோகத்திற்காக, 1990 Dec-ல் நடைபெற்ற O/L பரீட்சை வினாத்தாள் தொகுதி (ஆங்கில வினாத்தாள், சமூகக்கல்வி, படவேலை, வினாத்தாள் அனைத்தும் உட்பட) விற்பனையாகிறது ஆங்கிலவினாத்தாள் தனியாகவும் பெற்றுக்கொள்ளலாம். சொற்ப பிரதிகளே கைவசமுண்டு விபரங்கட்கு: எக்ஸிறல் இன்ஸ்ரிரியூட், இருபாலைச் சந்தி. 03032

**விற்பனைக்கு**

மிக்கவைற் விநானப் பவுடர் எண்ணெய் முழுக்குக்கென இயற்கைச் சாதனங்கள் கொண்டு தயாரிக்கப்பட்டது. பக்கெற் ஒன்று ரூபா 1.50/- மட்டுமே இணுவில், திருநெல்வேலி யாழ்நகர் அண்ணா கோப்பிக் கடைகளிலும் விற்பனையாகிறது. 03023


# இலங்கை வங்கிக்கான பணம் கிடைப்பதில் தொடர்ந்து தாமதமாம்

இலங்கை வங்கிகளுக்குரிய பணம் ஒவ்வொரு முறையும் குறிப்பிட்ட கால எல்லை கடந்தேகப்பலில் அனுப்பிவைக்கப்படுகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் வங்கிசார்ந்த பணக் கொடுக்கல் வாங்கல்களை முழுமையாக மேற்கொள்ள முடியாமல் இருப்பதாக மாவட்ட வங்கிமுகாமையாளர் திரு. கணேசமூர்த்தி கவலை தெரிவித்தார்.

மாதாந்தம் வங்கி அலுவல்களுக்கு 165 மில்லியன் ரூபா பணம் தேவைப்படுகிறது. ஆனால் 50 மில்லியன் பணமே மாதாந்தம் கப்பல் மூலம் அனுப்பிவைக்கப்படுகிறது.

இவ்வாறே அனுப்பிவைக்கும் சிறிய தொகைப் பணமும் காலம் தப்பியே ஒவ்வொரு முறையும் பருத்தித்துறை வந்தடைவதாக அவர் மேலும் தெரிவித்தார் (ப 11)

# மார்லன் பிராண்டோவின் மகனுக்கு கொலைக் குற்றத்தின் பேரில் சிறை

அமெரிக்க நீதி மன்றம் ஒன்றினால் பிரபல ஹொலிவூட் நடிகர் மார்லன் பிராண்டோவின் மகன் கிறிஸ்டியன் பிராண்டோ தண்டிக்கப்பட்டுள்ளார்.

தன் ஒன்றுவிட்ட சகோதரியின் காதலனைச் சுட்டுக் கொன்றதற்காக அவருக்குப் பத்துவருடச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

# தனியார் ஊழியர்களுக்கும் சம்பள உயர்வு வழங்க கோரிக்கை

"அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட 200 ரூபா, 300 ரூபா சம்பள உயர்வுகள் இது வரை பல தனியார்துறை நிறுவனங்களைச் சேர்ந்த தொழிலாளர்களுக்குக் கிடைக்கவில்லை. தனியார் துறையினருக்கும் இச்சம்பள உயர்வு கிடைக்க வேண்டுமென நிதியமைச்சிடம் கேட்டுள்ளேன்."

மேற்கண்டவாறு கைத்தொழில் ராஜாங்க அமைச்சரும், இ.தொ.கா. பொதுச் செயலாளருமான திரு. எம். எஸ். செல்லச்சாமி கொழும்பில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசுகையில் கூறினார்.

# அதிகாரிகள் கொழும்பு பயணம்

யாழ் பல்கலைக்கழகத்துக்குரிய இரசாயனப் பொருள்கள், மருத்துவ உபகரணங்கள், பெறுமதி வாய்ந்த நூல்கள் போன்றவற்றை கொழும்பிலிருந்து எடுத்து வருவதற்காக யாழ் பல்கலைக்கழக உயரதிகாரிகள் கொழும்பு சென்றுள்ளனர். (ப-11)

# புத்தளத்தில் இந்து ஆலயங்களை விஷமிகள் சேதமாக்கினர்

புத்தளம் பகுதியில் பல வருடங்களாக இருந்து வந்த இந்து ஆலயங்கள் தற்போது விஷமிகளால் திட்டமிட்ட அடிப்படையில் சேதமாக்கப்பட்டு வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

புத்தளம் வைத்தியசாலை வளவுக்குள் அரச மரத்தின் கீழ் அமைக்கப்பட்டிருந்த சிறிய ஆலயத்தின் பிள்ளையார் சிலை இனந்தெரியாதோரால் திருடப்பட்டுள்ளது.

இவ்வாறே புத்தளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயமும் உடைக்கப்பட்டுச் சேதமாக்கப்பட்டுள்ளது.

# போர்க்காலச் சூழ்நிலைக்கு ஏற்ப இலங்கையர் பாதுகாப்பு பெற்றனர்

ஈராக் குவைத்தை ஆக்கிரமித்துபோர்தொடங்கியகாலம் முதல் இலங்கையர்களுக்கு அந் நாட்டு அரசின் போர்க்கால சூழ்நிலைக்கேற்ப பாதுகாப்பு அளித்து வந்தது என்று சவூதி அரேபியாவில் இருந்து இலங்கை திரும்பிய நவாலியைச் சேர்ந்த நவரட்ணம் சாம்பசிவம் தெரிவித்தார்.

இலங்கையரில் அநேகமானோர் வெளிநாடுகளில் இருந்து இலங்கை திரும்புவதற்கு அதிக நாட்டமற்றவர்களாகக் காணப்படுகின்றனர் என்றும் சொன்னார். (ப 11)

# வடபகுதி உள்ளூராட்சி ஓய்வூதியர் நலன்புரிச்சங்கம் அங்குரார்ப்பணம்

வடபகுதியில் உள்ளூராட்சி ஓய்வூதியர் நலன்புரிச் சங்கம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது. முன்னாள் மாநகரசபை ஆணையாளர் திரு. சி வி கே சிவ

தவர்களுக்கு அரசு உறுதியளித்த ஆறுமாத போனஸை உடனடியாக வழங்க வேண்டும் என்று கோரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. (16)

# 'வாசு எம். பியின் செயலால் முழுச் சபைக்குமே அபகீர்த்தி'

**- மந்திரி ரணசிங்க**

"சபாநாயகரின் ஆசனத்தில் திரு. வாசுதேவ நாணயக்கார அமர்ந்த செயலால் முழுப் பாராளுமன்றத்துக்குமே அபகீர்த்தி ஏற்பட்டு விட்டது."

மேற்கண்டவாறு சபாநாயகர் ஆசனத்தில் பலவந்தமாக அமர்ந்ததற்காக ஐக்கிய சோஷலிஸ அணி எம்.பியான திரு. வாசுதேவ நாணயக்காரவைக் கண்டிக்கும் பிரேரணை மீது நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் பேசுகையில் கட்டிடங்கள் மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் திரு. சந்திரா ரணசிங்க பேசுகையில் கூறினார்.

"எது காரணமாக இருந்தாலும் திரு. நாணயக்காரவின் இச்செயல் மன்னிக்கப்பட முடியாதது" என்றும் அவர் கூறினார்.

சபை முதல்வரும், அமைச்சருமான திரு ரணில் விக்கிரமசிங்க பேசுகையில் 'திரு நாணயக்காரவின் இச்செயல் சபை நடவடிக்கைகளைக் குழப்பும் நோக்கம் கொண்டது' என்றார்.

பின்னர் இப் பிரேரணை நிறைவேற்றப்பட்டது.

# சிறுநிலை விவசாயிகள் உதவித் திட்டத்தில் யாழ் விவசாயிகளும் பயன்பெறுவர்

யு. எஸ். எயிட் நிறுவனம், கெயர் ஸ்தாபனத்தின் மூலம் சிறுநிலை விவசாயிகள் உதவித் திட்டத்தின் கீழ் யாழ் மாவட்டத்தில் பதினையாயிரம் விவசாயிகளுக்கு விவசாய உள்ளீடுகளை வழங்க முன்வந்துள்ளது.

இத்திட்டத்தில் சிக்கன சேமிப்புக் கடன் உதவிச் சேமிப்புச் சங்கம், உவர்வலய அபிவிருத்திச் சபை, தமிழர் அகதிகள் புனர்வாழ்வுக் கழகம், கோப்பாய் மக்கள் நலன் காக்கும் பிரிவு ஆகியன பங்கேற்கின்றன.

கோப்பாய்ப் பகுதியிலுள்ள 1500 விவசாயிகட்கு கோப்பாய் மக்கள் நலன் காக்கும் பிரிவு ஆளுக்குத் தனா 112.05 கிலோ பசளை வகைகளையும், 32 லீற்றருக்குக் குறையாத மண்ணெண்ணெய்யையும், விதைத் தானிய வகைகளையும் இத்திட்டத்தின் கீழ் வழங்கவுள்ளது.

1100 மூடை பசளை வகைகளும், 1050 லீற். மண்ணெண்ணெய்யும் இதுவரை இந்நிலையத்துக்குக் கிடைத்துள்ளன. இத்திட்டத்தின் கீழ் முதலாம், இரண்டாம் கட்டங்கள் நிறைவேறிக் கொண்டிருக்கின்றன.

இதைப் பெறும் ஒவ்வொரு விவசாயியும் இதன் முழுப் பெறுமதியாக 1500 ரூபா பணத்தை ஒரு வருடத்துக்குள் வருடாந்தம் ஆறுவீத வட்டியுடன் சேர்த்துக் கொடுத்து உதவ உள்ளனர். (26)

## இராணுவச்சிப்பாய் தற்கொலை

புத்தளத்தில் உள்ள வில்லுவ இராணுவ முகாமில் உள்ள ராணுவச் சிப்பாய் ஒருவர் தன்னைத்தானே துப்பாக்கியால் சுட்டுத் தற்கொலை செய்துகொண்டார்.

ஜி. பி எச். எஸ். பெரேரா என்பவரே பிரஸ்தாப சிப்பாயாவார்.

# நாகதம்பிரான் வருடாந்த உற்சவப்பொங்கல் நடைபெறாது

புளியம் பொக்கனை நாகதம்பிரான் வருடாந்த உற்சவப் பொங்கல் விழாவும் நேர்த்திக் கடன் பூர்த்தியும் தற்போது நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக வழமைபோல் இவ்வருடம் நடத்துவதில்லை எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கண்டாவளை உதவி அரசாங்க அதிபர் திரு. சதா. தனபாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலேயே இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

29-ம் திகதி வெள்ளிக்கிழமை வரும் உத்தர நட்சத்திரத்தில் கோயில் பூஜை மாத்திரம் நடைபெறும்.

# 'திடீர்நட்பு' - தில்லுமுல்லு

தற்போது நிலவும் அசாதாரண சூழ்நிலையால் பாதிக்கப்பட்டு சைக்கிளில் பூநகரி ஊடாகக் கிளிநொச்சிப் பகுதிக்குச் சென்று மண்ணெண்ணெய், உரம், மற்றும் பொருள்களைக் கொள்வனவு செய்து சிறு அளவில் வர்த்தகம் செய்ய முற்படுவோரிடம் கைவரிசை காட்டுவதற்கென்றே ஓர் மோசடிக் கும்பல் உருவாகியுள்ளதாம்.

இவர்கள் கடன் பெற்று அல்லது அடகு வைத்து பணத்தில் பொருட்களை வாங்கிக்கொண்டு திரும்பும் வழியில் சற்றுக் கவனக் குறைவாக இருந்தால் குறிப்பிட்ட கும்பல் பொருள்களுடன் சைக்கிள்களைக்கூட அபகரித்து செய்து விடுகிறதாம்.

வலிந்து கதை கொடுத்து திடீர் நட்புக் கொள்ளும் இத் தில்லுமுல்லுப் பேர் வழிகள் குறித்து விழிப்புடன் இருந்து கொள்ளுமாறு பாதிக்கப்பட்டவர்கள் கூறுகின்றனர்.

## அதிபர் பதவி ஒருவருடமாகக் காலி

கடந்த ஒரு வருடமாக உடுத்துறை கொத்தணி அதிபர் பதவி நிரப்பப்படாமல் காலியாக உள்ளது.

முன்னர் இப் பதவியில் இருந்தவர் கல்வி அதிகாரியாகப் பதவியுயர்வு பெற்றுச் சென்றதைத் தொடர்ந்து இன்னும் இப் பதவி வெற்றிடமாக இருந்துவருகின்றது (43)

# மன்னர் மாளிகை உட்பட குவைத்தின் நகர்ப்பகுதி ஈராக்கினால் முழுநாசம்!

குவைத் நகரைக் கைவிட்டு ... மின்சார உற்பத்தி நிலையங் ... வழியாகவும் தப்பிச் சென்ற

ஞானம் இதன் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

இருபது வருடங்களைப் பூர்த்தி செய்வதற்கு முன்பாக ஓய்வுபெற விண்ணப்பித்துள்ளவர்களுக்கு இலவச உலர் உணவு கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

ஓய்வுபெற விண்ணப்பித்

## பாணுக்குள் கம்பித்துண்டு பெண்மணி ஆஸ்பத்திரியில்

நாயன்மார்கட்டுப் பகுதியில் நேற்று முன்தினம் பெண்மணி ஒருவர் பாண் சாப்பிடுகையில் பாணுக்குள் இருந்த விறேப்வரின் (கம்பித்துண்டு) குத்தி தொண்டையில் காயம் ஏற்பட்டது.

இவர் யாழ்போதனா வைத்தியசாலையில் தற்போது அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகின்றார். (33)

## திறந்த பல்கலை மாணவர் விபரம்...

திறந்த பல்கலைக்கழக யாழ் பிரதேச நிலையத்தில் கல்வி பயிலும் சகல மட்டங்களையும் சேர்ந்த தொழில் நுட்பவியல் (இயந்திரவியல்) கற்கைநெறி மாணவர்களை சனிக்கிழமையும், விஞ்ஞான மாணி கற்கைநெறி மாணவர்களை ஞாயிற்றுக்கிழமையும் யாழ் பிரதேச நிலையத்திற்கு சமுகமளிக்கும் படி உதவிப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

யாழ் பிரதேச நிலையத்தில் உயர் கல்விபயிலும் மாணவர்களின் விவரங்களைச் சேகரிப்பதற்காகவே அன்று சமுகமளிக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர். (ப-7)

தப்பி ஓடுகையில் ஈராக்கியத் துருப்புக்கள் ஒரு தொகையான குவைத் பிரஜைகளை கடத்திச் சென்றதாக வெளியிலுள்ள குவைத் வானொலி தெரிவித்தனர்.

உயர்தர ஈராக்கிய இராணுவ அதிகாரிகள் உட்பட பலர் தங்கள் சொந்த உடைமைகளையும் கைவிட்டுச் சென்றதாக சுதந்திரக் குவைத்இயக்கத்தினர் கூறினர்.

ஆடம்பர ஹோட்டல்கள்

மின்சார உற்பத்தி நிலையங்கள் உட்பட முக்கிய கட்டிடங்களை ஈராக்கியர் தகர்க்க முயன்றிருக்கிறார்கள். கொள்ளையடித்த பொருள்களையும் பழுதான டிரக்குகள், ஜீப்புகள் டாங்கிகள் உட்பட பலவற்றையும் அப்படியே போட்டுவிட்டு அவர்கள் வெளியேறியதாக சுதந்திர குவைத் இயக்கத்தின் அறிக்கை தெரிவிக்கிறது.

உயர் அதிகாரிகள், திருடப்பட்ட கார்களில், டாங்கிகளின் துணையுடன் எல்லா வீதிகள் வழியாகவும் தப்பிச் சென்றதாகவும் கூறப்பட்டுள்ளது.

'குவைத் நகரில் கட்டிடங்கள் இடிந்து கிடக்கின்றன. வீதிகள் வெறிச்சோடிக் கிடக்கின்றன. வீதித் தடைகள் காணப்படுகின்றன. எமீரின் மாளிகைச் சுவரில் துவாரம் காணப்படுகிறது மன்னரின் மாளிகை நாசமாக்கப்பட்டுள்ளது. நகரை அழிக்க என்னென்ன செய்ய முடியுமோ அவ்வளவும் செய்யப்பட்டிருக்கிறது'. என பி. பி. சி. செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

## யோன் மக்கன் றோ வெற்றி பெற்றார்

சிக்காக்கோவில் நடைபெற்ற தனிநபர் ரெனிஸ் போட்டியின் இறுதி ஆட்டத்தில்யோன் மக்கன்றோ தனது சகோதரன் பற்றிக் மக்கன்றோவை மூன்று நேர் செற்றுக்களால் வென்று சாம்பியன்பட்டத்தைத்தட்டிக்கொண்டார்.

இப்போட்டியில் வெற்றி பெற்றதினால் இவருக்குக் கிடைத்த பரிசுத் தொகை 32 ஆயிரத்துநாநூறு அமெரிக்கன் டொலர்களை. இலங்கை நாணயப்படி இட்டத்தட்ட 12 இலட்சத்து 96 ஆயிரம் ரூபாய்கள். (16)


## தாதிப் பயிற்சி நெறி
## Diploma in Nursing

விண்ணப்பத் திகதி 10.03.91 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

1. 1½ வருட காலப் பயிற்சி நெறி.
2. சர்வதேசத் தகைமையுடைய சான்றிதழ்
3. அரசினர் வைத்தியசாலையில் செய்முறைப் பயிற்சிகள்.
4. அரச தொழில் வாய்ப்புக்கு ஏற்புடையது.

விபரங்கட்கு:-

அதிபர்

**சாயி மேடிக்கல் அக்கடமி**

இல. 6, பருத்தித்துறை வீதி,
(முதலாம் ஒழுங்கை, மக் ரவல்ஸ் அருகில்,)
யாழ்நகர். 03037



★ உங்களுக்குத் தேவையான புகைப்படங்கள்
★ றபர் சீல்
★ HALF TONE- LINE-கலர் புளொக்ஸ் (BLOCKS)
★ கலர் பிலிம் சுருள்கள்
★ ஓவிய வேலைகள்
★ கலர் பிலிம் சுருள்களைப் படமாக்குதல்
★ பிறேம் போடுதல்
★ ஸ்ரிக்கேஸ் போடுதல்
ஸ்ரிக்கேஸ் தயாரிப்பாளர்கள்

**கொழும்பு ஸ்ருடியோ**

55, மணிக்கூட்டு வீதி, வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்.

245, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

03016

# சந்திரசேகர் ஆட்சிக்கு மீண்டும் நெருக்கடி

## இரு சபைகளையும் இ. காங்கிரஸ் பகிஷ்கரிப்பு!

முன்னாள் பிரதம மந்திரியும், இந்திரா காங்கிரஸ் தலைவருமான திரு.ராஜீவ் காந்தியை வேவுபார்த்ததாகக் கூறப்படும் விவகாரம் விஸ்வரூபம் எடுத்துள்ளது. இவ்விவகாரம் பற்றிய தெளிவான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, குற்ற மிழைத்தவர்கள் தண்டிக்கப்படும் வரை இரு சபைகளையும் பகிஷ்கரிக்கப்போவதாக இந்திரா காங்கிரஸ் அறிவித்துள்ளது.

இதனையடுத்து சந்திரசேகர் தலைமையிலான சிறுபான்மை அரசுக்கு மீண்டும் 'கண்டம்' ஏற்பட்டுள்ளதாகப் புதுடில்லி வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஏஜென்சிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்திரா காங்கிரஸின் பகிஷ்கரிப்பு அறிவிப்பினால் தோன்றியுள்ள நிலைமை பற்றி ஆராய்வதற்காக மத்திய அமைச்சரவை நேற்று முன்தினமிரவு அவசர அவசரமாகக் கூடியது.

ஜனதாதள் (எஸ்) கட்சியின் பிரதான நேசக் கட்சியான இந்திரா காங்கிரஸும், மூன்று எதிர்க் கட்சிகளும், பஞ்சாப் விவகாரம் பற்றி விவாதிப்பதற்காக நேற்று முன்தினமிரவு அழைத்திருந்த விருந்துக் கூட்டம் ஒன்றையும் புறக்கணித்து விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### ஆட்சி கவிழும் நிலை வலுவுறுகிறது

பிரதமர் திரு. சந்திரசேகர் நேற்று ஜனாதிபதி திரு ஆர். வெங்கட்ராமனைச் சந்தித்து தற்போதைய நெருக்கடிநிலை பற்றி உரையாடியதாக நேற்றுப் பிற்பகல் தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதியின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீதான உரையை உடனே முடித்துக்கொள்ளுமாறு எதிர்க்கட்சிகள் நேற்று கோரிக்கை விடுத்தன.

தம் கேள்விகளுக்குப் பதிலளிக்கக் கூட அரசாங்கம் ஏதும் இல்லை என்றும் பிரதமர் தன் நிலையை விளக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரினர்.

லோகசபைக்கு நேற்று இந்திரா காங்கிரஸும் அ.தி.மு.க வும் சமுகமளிக்க வில்லை.

சந்திரசேகர் அரசு தானாக கவிழும் நிலையை உருவாக்க வேண்டும் என எதிர்க் கட்சிகள் நேற்றுப் புதுடில்லியில் கூடித் தீர்மானித்தன.

தற்போது நிலவும் பதற்ற நிலையால் சந்திரசேகர் ஆட்சி கவிழும் சூழ்நிலை வலுப்பட்டு வருவதாக நேற்றுப் பிற்பகல் அரசியல் அவதானிகள் கூறினர்.

### இன்று மானிப்பாய் ம.க.வி.போட்டி

மானிப்பாய் மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது. மானிப்பாய் கோட்டக் கல்வி அதிகாரி திரு.என் தனஞ்செயன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

### கடத்தல் முயற்சி முறியடிப்பு

நீர்கொழும்பு வாவியில் இழுவைப்படகு ஒன்றுடன் 2595 கிலோ கராம்பு மூடைகள் பொலிசாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

படகிலிருந்த ஒருவரும் கைது செய்யப்பட்டார்.

இந்தியாவுக்கு இவை கடத்தப்படவிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

## மலையகத் தொழிலாளர்களுக்கும் அரசு அநீதி இழைக்கிறது எனப் புகார்

வடக்கு, கிழக்கு மாகாணத் தமிழர்களைப் பல்வேறு முன்னேற்றச் செயற்பாடுகளிலும் திட்டமிட்டுப் புறக்கணித்து வருகிறது என்ற கண்டனத்துக்கு இலக்காகியுள்ள ஸ்ரீலங்கா அரசு படிப்படியாக மலையகத் தோட்டத் தொழிலாளர்களையும் பாதிக்கும் நடவடிக்கையிலும் இப்போது ஈடுபட்டு வருகிறது எனக் குற்றஞ் சாட்டப்படுகிறது.

தொழிலாளரின் அனுமதியின்றி அரச சம்பளத்தில் பணம் அறவிடுகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.

கங்காணி முறை வழக்கத்தில் இருந்த காலத்தில்தான் தொழிலாளர்களின் அனுமதியின்றி அவர்களின் பணம் அறவிடப்படும் முறை இருந்தது. இம்முறை தண்டு முறை நீக்கச் சட்டத்தின் மூலம் 1921 ஆம் ஆண்டு ஒழிக்கப்பட்டது.

1971 இல் கொண்டு வரப்பட்ட சம்பள நிர்ணய சபை கட்டளைச் சட்ட மூலம், தொழிலாளர்களின் அனுமதியின்றி அவர்களின் சம்பளத்தில் எந்தவிதமான கழிவுகளும் செய்யமுடியாது என்பது உறுதிப்படுத்தப்பட்டது.

ஆனால் அச் சட்டத்திற்கு முரணாக இன்று 75 ரூபா சம்பளத்தில் இருந்து கழிக்கப்படுகிறது என ஐ.தோ.தொ. சங்கத்தின் தலைவர் எஸ். நடேசன் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அவ்வறிக்கையில் அவர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:-

நாட்டில் உள்ள மற்ற தொழிலாளர்களுக்கு முதலில் முழுப் பணம் வழங்கப்பட்டு பின்னர்தான் தவணைமுறையில் கழிவுகள் செய்யப்படுகின்றன. ஆனால் தோட்டத் தொழிலாளர் விசயத்தில் மாத்திரம் ஏன் இந்தப் பாரபட்சம்? ஆனால் தோட்டத்தொழிலாளியின் நிலைமை தான் மிக மோசமாக உள்ளது.

## ஆசிய நாடுகளில் பணிபுரிய இலங்கைத் தொண்டர்கள்

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் தொண்டர் சேவையாளர்கள் தெரிவு செய்யப்பட்டு ஆசிய நாடுகளில் பணிபுரிய அனுப்பி வைக்கப்படவுள்ளனர்.

இத்திட்டத்தில் இணைய விரும்பும் தகுதி வாய்ந்த இளைஞர், யுவதிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இரண்டு வருட செயல் திட்டத்தின் கீழ் அனுப்பி வைக்கப்படவுள்ள இவர்கள் ஆங்கிலமொழி அறிவுள்ளவராக இருக்க வேண்டும்.

அத்துடன் சமூக அபிவிருத்தி, விவசாயம், கால்நடை பண்ணை வளர்ப்பு, ஏதாவதொன்றில் திறமை மிக்கவராகவும், 22 வயதிற்கும் 35 வயதிற்கும் இடைப்பட்டவராகவும் இருக்கவேண்டும்.

தெரிவு செய்யப்படுபவர்களுக்கு விமான பயண வசதி, தங்குமிடம், உணவு வசதிகளுடன் செலவுக்காகக் கொடுப்பனவும் வழங்கப்படும்.

விண்ணப்பதாரிகள் தமது பெயர், விலாசம், வயது, மாவட்டம், கல்வித் தராதரம் மேற்குறிப்பிட்ட துறைகளில் தமக்குள்ள திறமைகள் என்பவற்றைக் குறிப்பிட்டுத் தாமே தயாரித்த விண்ணப்பப் படிவங்களை ஐக்கிய நாடுகள் தொண்டர் சேவையாளர் திட்டம், பணிப்பாளர் நாய...

### சேவைக்கால ஆலோசகர்கள்

வடமராட்சி கோட்டப் பகுதியில் உள்ள கொத்தணிகளுக்கு சேவைக்காலப் பயிற்சி ஆலோசகர்கள் நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

போதிய தகுதி உள்ள ஆசிரியர்கள் தமது அதிபர்களுக்கூடாக உடனடியாக கோட்டக் கல்வி அதிகாரியிடம் விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

கணிதம், விஞ்ஞானம், விவசாயம், மனையியல், சமூகக்கல்வி போன்ற பாடங்களுக்கும் மேற்படி சேவைக் காலப் பயிற்சி ஆலோசகர்கள் நியமிக்கப்பட உள்ளனர் (43)

### தொழில் புரிய கடனுதவி

அண்மையில் அகதிகள்புனர்வாழ்வு நிதியம் மருதங்கேணிப் பகுதியில் தங்கியுள்ள இடம்பெயர்ந்த 40 மீனவர்களுக்கு தொழில் புரிவதற்காக இலகு கடன் அடிப்படையில் 67 000 ரூபாவை பகிர்ந்து அளித்துள்ளது.

1000 ரூபாமுதல் 2000ரூபா வரை இக்கடன் வழங்கப்பட்டது. வாரம் 75 ரூபா முதல் 100 ...

### சித்தமருத்துவ வைத்தியர்

...

பல்கலைக்கழக அனுமதி, அபிவிருத்தி சம்பந்தமாகப் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுத் தலைவர், பேராசிரியர் அர்ச்சுன அலுவிகார எழுதிய கட்டுரையின் சில பகுதிகள் இங்கு தரப்படுகின்றன

## அதிக மாணவர் உயர் கல்வி வாய்ப்புப்பெற பல்கலைக்கழகக் கல்லூரிகள்

1989 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சையின் அடிப்படையில் 37000 மாணவர்கள் ஆகக் குறைந்த புள்ளிகள் பெற்றுப் பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி பெற்றுள்ளார்கள். இவர்களில் 25 300 மாணவர்கள் அனுமதிக்கு மனுப்பண்ணியுள்ளார்கள். 1988 ஆம் ஆண்டு ஜி.சி.ஈ. உயர்தரம் பரீட்சையின் அடிப்படையில் 18000 மாணவர்கள் மனுப்பண்ணினார்கள். வழக்கத்திலும் பார்க்க 1989 ஆம் ஆண்டு மனுப்பண்ணியவர்களின் தொகை கூடுதலானது.

பல்கலைக்கழகக் கல்லூரிகள் நிறுவுதற்கான திட்டம் இருப்பினும், சம்பிரதாயமான பல்கலைக்கழகங்களின் அவசியத்தையும் ஆணைக்குழு உணர்ந்துள்ளது. இவற்றை நிறுவுவதால் வைத்தியத்துறை மட்டுமன்றி, மற்றும் சகலதுறைகளுக்கும் அனுமதியை அதிகரிக்க வசதியேற்படும்.

1989 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சையின் அடிப்படையில் 9300 மாணவர்கள் பல்கலைக் கழகத்திற்கு அனுமதிக்கப்பட்டார்கள். இது கடந்த வருடத்தைவிட 30—40 வீதம் கூடுதலானதாகும்.

### நிதிக்கட்டுப்பாடு

பல்கலைக்கழகங்களுக்குத் தேவையான நிதி ஒதுக்குவதில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. இதன் படி நிதியைக் கையாள்வதில் பல்கலைக்கழகங்களுக்குக் கூடிய அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. நிதிவிடயத்தில் பல்கலைக்கழகம் கூடுதலான பொறுப்பையும் வகிக்கவேண்டும். நிதி சரியான வகையில் செலவு செய்யப்படுகின்றதா எனக் கண்காணிக்கும் பொறுப்பும், உறுதிசெய்யும் பொறுப்பும் பல்கலைக்கழகத்தைச் சார்ந்தது. பல்கலைக்கழக மாணவர் ஒருவருக்கு ஒரு வருடத்திற்கு ரூபா 50, 000 செலவாகிறது.

நிதி விடயத்தில் பொது மக்களின் பங்களிப்பும் அவசியம். கூடுதலான மாணவர்கள் உயர்கல்வி வசதியினைப் பெற வேண்டும் என விரும்பும் பொதுமக்கள் கூடுதலான பல்கலைக் கழகங்கள் நிறுவுவதற்கு உதவி புரிய வேண்டும். அவற்றின் துரித அபிவிருத்திக்கு நிதி தேவை. பொது மக்கள் முன்வந்து நன்கொடை அளிப்பின் அபிவிருத்தி நடவடிக்கையில் ஈடுபட முடியும். தற்போது ஆகக்குறைந்தது 400 மில்லியன் ரூபா தேவை. இவ்வருடம் ஆனி மாதத்திற்கு முன் 100, 000 000/- ரூபா சேர்க்க முடியும் என்பது எனது நம்பிக்கை.

### பொதுமக்கள் பொறுப்பு

பல்கலைக்கழக வளர்ச்சிக்கும் பொதுமக்கள் பண நன்கொடையைத் தவிர, வேறுவகையிலும் உதவி செய்யலாம். பல்கலைக்கழகங்களுக்கு அருகில் வசிப்பவர்கள் மாணவர்களுக்கு நியாய வாடகையில் இடவசதிகள் செய்துகொடுக்கலாம். நியாய விலையில் உணவு கொடுக்கலாம். மாணவர்களின் நிதி நிலைமையைப் பாதிக்காத வகையில் அவர்களுக்கு இடவசதி, உணவு வசதிகளும் செய்துகொடுத்தல் வேண்டும்.

செயல் திட்டத்தின் கீழ் அனுப்பி வைக்கப்படவுள்ள இவர்கள் ஆங்கிலமொழி அறிவுள்ளவராக இருக்க வேண்டும்.

அத்துடன் சமூக அபிவிருத்தி, விவசாயம், கால்நடை பண்ணை வளர்ப்பு, மீன்பிடி கைத்தொழில், கைப்பணிப் பொருள்கள் தயாரித்தல், சுகாதார விடயங்கள் அபிவிருத்தி மற்றும் பொருளாதார மேம்பாட்டுச் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் போன்ற துறைகளில்

மாவட்டம், கல்வித் தராதரம் மேற்குறிப்பிட்ட துறைகளில் தமக்குள்ள திறமைகள் என்பவற்றைக் குறிப்பிட்டுத் தாமே தயாரித்த விண்ணப்பப் படிவங்களை ஐக்கிய நாடுகள் தொண்டர் சேவையாளர் திட்டம், பணிப்பாளர் நாயகம், தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், 65 ஹைலெவல் வீதி, மஹரகம என்ற விலாசத்திற்கு எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அடையாள அட்டை இல்லாதோர் முன்கூட்டியே தொடர்புகொள்ள வேண்டும்

பரீட்சைக்குத் தோற்றுபவர்கள் ஆள்மாறாட்டம் செய்யாமல் இருப்பதற்காகவே தேசிய ஆள் அடையாள அட்டையைக் கொண்டு வருமாறு அறிவுறுத்தப்படுகின்றனர். கடவுச் சீட்டுகள் கூட இன்று உண்மையானவையல்ல என்பதாலேயே அவைகளும் பரீட்சை மண்டபத்தில் நிராகரிக்கப்படுகின்றன, அவ்வாறு அடையாள அட்டை இல்லாதவர்கள் முன்கூட்டியே பதிவாளருடன் தொடர்பு கொண்டு அதற்கான மாற்றீடுகளைச் செய்து கொள்ள வேண்டுமென்றும் பரீட்சார்த்திகளுக்குப் பரீட்சை அனுமதிப் பத்திரங்கள் அனுப்பும் போதே அறிவுறுத்தலில் வலியுறுத்தப்பட்டுள்ளது என யாழ் பல்கலைக்கழக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த 5. 3. 91 இல் நான்காம் பக்கத்தில் 'அடையாள அட்டை இல்லாதவர்கள் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேற்றம்' என்ற செய்தி தொடர்பாகவே அவர் இக்கருத்தை வெளியிட்டார். யார் என்று இனம் காண முடியாதவர்கள் எல்லாம் கையொப்பமிட்டு வழங்கும் போர்ம்களைப் பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்திற்கு எடுத்துவருவதை அனுமதிப்பதும் ஆள்மாறாட்டம் செய்வதற்கு இடமளிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

களுக்கும் மேற்படி சேவைக்காலப் பயிற்சி ஆலோசகர்கள் நியமிக்கப்பட உள்ளனர் (43)

## சித்தமருத்துவ வைத்தியர் கலந்துரையாடல்

கைதடியில் அமைந்துள்ள யாழ் பல்கலைக்கழக சித்த மருத்துவத் துறையில் சகல சித்தமருத்துவ வைத்தியர்களும் கலந்து கொள்ளும் கலந்துரையாடல் இம் மாதம் 10ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இத்தருணத்தில் இன்றைய நிலையில் சித்த மருத்துவர்களின் நிலை, சித்தமருத்துவத் துறையின் வளர்ச்சி, தற்போதைய சூழ்நிலையில் சித்தமருத்துவத்துறை மக்களுக்கு ஆற்றவேண்டிய சேவை என்பன பற்றி விரிவாக ஆராயப்பட இருப்பதால் சகல சித்தவைத்தியர்களும் கலந்து கொண்டு தங்கள் கருத்துக்களை நேரடியாக தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

அத்துடன் மறுமலர்ச்சிக் கழக முக்கியஸ்தர்களையும் ஆய்வு நிறுவன முக்கியஸ்தர்களையும் மற்றும் சித்தமருத்துவத்துறையின் வளர்ச்சியில் அக்கறையுள்ள கல்விமான்கள், அபிமானிகளையும் கலந்துகொள்ளுமாறு கோரப்படுகின்றது.

ளுக்கு தொழில் புரிவதற்காக இக்கடன் அடிப்படையில் 67 000 ரூபாவை பகிர்ந்து அளித்துள்ளது.

1000 ரூபாமுதல் 2000ரூபா வரை இக்கடன் வழங்கப்பட்டது. வாரம் 75 ரூபா முதல் 100 ரூபாவரை கடனைப் பெற்றோர் மீளச் செலுத்த வேண்டும் எனவும் மீளப் பெறும் இப் பணத்தினைக் கொண்டு வேறு இலருக்கு கடன் வசதி அளிக்கப்படும் எனவும் தெரியவந்துள்ளது.

(ப 10)

## விரைவில் சுகாதாரப் பகுதி பரீட்சை நிகழும்?

வடக்கு கிழக்கு மாகாணத்திலுள்ள சுகாதாரத் திணைக்களத்தைச் சேர்ந்தோர் சுகாதாரப் பகுதியினரால் நடைமுறைப்படுத்தும் மருத்துவ மத்திய தர தொழில் நுட்ப பயிலுநர்களுக்கான பரீட்சைக்கு விரைவில் தோற்ற முடியும் எனத் தெரியவந்துள்ளது.

இப்பரீட்சையினை விரைவில் நடாத்துமாறு சுகாதார மகளிர் விவகார அமைச்சர் பரீட்சைத் திணைக்களத்தைக் கோரியுள்ளதாக சுகாதார அதியட்சகர் டாக்டர் ஜோர்ஜ் மெண்டிஸ் தெரிவித்துள்ளார். (ப-10)

பல்கலைக்கழக வளர்ச்சிக்கும் பொதுமக்கள் பண நன்கொடையைத் தவிர, வேறுவகையிலும் உதவி செய்யலாம். பல்கலைக்கழகங்களுக்கு அருகில் வசிப்பவர்கள் மாணவர்களுக்கு நியாய வாடகையில் இடவசதிகள் செய்துகொடுக்கலாம். நியாய விலையில் உணவு கொடுக்கலாம். மாணவர்களின் நிதி நிலைமையைப் பாதிக்காத வகையில் அவர்களுக்கு இடவசதி, உணவு வசதிகளும் செய்துகொடுத்தல் வேண்டும். இவ்விடயத்தில் பொதுமக்களுக்கும் பொறுப்பும், கடமைப்பாடும் உண்டு.

### பல்கலைக்கழகக் கல்லூரிகள்

அதிக மாணவர்களுக்கு உயர்கல்வி வாய்ப்பு அளிக்கும் வகையில் பல்கலைக்கழகக் கல்லூரிகள் திறக்கப்பட இருக்கின்றன. இவை நேரடியாகவோ, அன்றி வேறு நிறுவனங்களின் ஊடாகவோ பல்கலைக்கழகத்துடன் தொடர்பு வைத்திருக்கும். புதிய கற்கை நெறிகள் அறிமுகப்படுத்தப்படும். இருவருட டிப்ளோமாப் பட்டம் பெறுவதற்கு வாய்ப்பு இருக்கும். இக்கற்கை நெறிகள் மாணவர் ஒருவர் சுயமுயற்சியில் வேலை வாய்ப்பைப் பெறவசதி அளிக்கும். அதுமட்டுமன்றி, இக்கற்கை நெறிகளில் திறமையாகச் செய்யும் மாணவர் உயர் கல்வியைத் தொடர்ந்து, பட்டதாரிப் பத்திரம் பெறுவதற்கும் வாய்ப்பு உண்டு.

1989 ஆம் ஆண்டிலும், அதற்கு முன்பும் ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்தியெய்தியவர்கள் இப் பல்கலைக்கழகக் கல்லூரிகளில் அனுமதி பெறமுடியும். இக் கல்லூரிகள் இவ்வருடம் எல்லா மாகாணங்களிலும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

மாணவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் பல்கலைக்கழகங்கள் வளர்ச்சியும், அபிவிருத்தியும் அடைய வேண்டுமானால், பொது மக்களின் பங்களிப்புக் கூடுதலாக இருத்தல் அவசியம்.

தொகுப்பு : வி. பி.

## இளைப்பாறிய டாக்டர்கள் மீண்டும் பணிபுரிய ஏற்பாடு

சுயவிருப்பத்தின் பேரில் இளைப்பாறிய டாக்டர், மற்றும் தாதிமார்கள் ஜனவரியில் இருந்து மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக சுகாதார வட்டாரங்கள் தெரிவித்தன.

இவ்வாறு வேலைக்கு அமர்த்தப்பட்ட 90 வீதமான வைத்தியர்கள், தாதிமார்கள் வெளிமாவட்டங்களில் பணிபுரிய மாட்டார்கள் எனவும் இவர்கள் தங்களது வசதிகளுக்கு ஏற்ப உள்ளூர்களிலே கடமையாற்ற விருப்பம் தெரிவித்துள்ளார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ப-11)

## கோட்டை ரயில் நிலையத்தில் ஊழியர்கள் கைகலப்பு

கொழும்பு - கோட்டை புகையிரத நிலையத்தில் பாதுகாப்பு அதிகாரியைச்சில போர்ட்டர்கள் தாக்கியதால் அவர் படுகாயமடைந்தார்.

இச்சம்பவ நேரம் மற்றொரு பாதுகாப்பு அதிகாரி தமது துப்பாக்கியால் மேல்நோக்கிச் சுட்டு சண்டையை நிறுத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கோட்டைப் பொலிஸார் சிலரைக் கைது செய்துள்ளனர். (70)

## கொழும்பில் கைதானவர்கள் விசாரணை இன்றி விடுதலை

கொழும்பில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற கார்க் குண்டு வெடிப்பின் போது கைது செய்யப்பட்ட 500க்கும் மேற்பட்ட இளைஞர்களும், யுவதிகளும் நேற்று முன்தினம் எவ்வித விசாரணைகளுமின்றி விடுவிக்கப்பட்டுள்ளதாகக்கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு விடுவிக்கப்பட்டவர்கள் லொட்ஜ்களில் இருப்பதற்கு அச்சம் தெரிவித்து வருவதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் திரும்புவதைக் காணக்கூடியதாகவிருக்கிறது.

கைதானவர்களில் அநேகமானோர் வெளிநாடு செல்வதற்குக் கொழும்பு சென்றோரே எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேபோல வட பகுதியில் இருந்து அச்சம் காரணமாக கொழும்பு சென்ற பலரும் மீண்டும் வடக்கே திரும்பவுள்ளனர். (ப-11)

## வெளி நோயாளர் பிரிவு விடுமுறை நாளில் இயங்கவில்லை

யாழ் போதனா வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவு ஞாயிறு மற்றும் விடுமுறை தினங்களில் ஒழுங்காக இயங்காததினால் மாணவர்கள், அரச ஊழியர்கள் இத் தினங்களில் சிகிச்சை பெறமுடியாதுள்ளனர்.

சுகாதார அமைச்சு வைத்தியர்களை விடுமுறை நாள்களிலும், ஞாயிற்றுக் கிழமைகளிலும் இயங்க அனுமதி வழங்கியும் யாழ்ப்பாணத்தில் ஏன் இயங்குவதில்லை எனப் பொதுமக்கள் கேட்கின்றனர்.

தற்போதைய சூழ்நிலையில் இங்கு விடுமுறை தினங்களில் இதனை இயங்க வைக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

---

கடற்படை— நோக்கி பீரங்கித் தாக்குதல்களை மேற்கொண்டது.

மூர்க்கத்தனமான இப்பீரங்கித் தாக்குதல்களால் திக்கம், பருத்தித்துறை முனை ஆகிய இடங்களின் கரையோரத்திலுள்ள பல வீடுகள் சேதமடைந்தன. உயிர்ச்சேதம் பற்றிய விபரங்கள் தெரியவில்லை. (38, ப-10)

---

கொழும்பு...

செல்லத்துரை (தெஹிவளை), ஏ இராமநாதன் (ஹவ்லொக் வீதி) என்போர் இவர்களாவர். (ப-10)

---

இந்தியப்...

நன்றி தெரிவிக்கும் தீர்மானம் நேற்று நண்பகல் இந்தியப்...

---

காங்கிரஸின்...

இந்தியாவில் சிறுபான்மை அரசுகளுக்கு ஏற்படும் சதியே சந்திரசேகரின் ஆட்சிக்கும்...

---

● அமைச்சர் ரஞ்சன் மரணவிசாரணையில் இன்ஸ்பெக்டர் சாட்சியம்:

# அதிரடிப் படைவீரர் ஒருவரின் எரிந்த சடலம் 100 மீற்றர் தூரத்தில் கிடக்கக் காணப்பட்டது

"குண்டு வெடிப்புச் சத்தம் கேட்டதும் அமைச்சர் ரஞ்சன் விஜேரட்னவுக்குப் பாதுகாப்பாகச் சென்ற அதிரடிப் படையினரின் வாகன அணிக்கும் எமக்கும் இடையில் இருந்த வானொலித் தொடர்பு துண்டிக்கப்பட்டது."

இவ்வாறு ராஜகிரிய அதிரடிப்படை முகாம் பிரதம இன்ஸ்பெக்டர் முகம்மது உவைஸ் லதிப், ரஞ்சன் விஜேரட்னவின் மரண விசாரணையின் போது சாட்சியமளிக்கையில் கூறினார்.

கொழும்பு பிரதம நீதிவான் கே.ரி. சித்திரசிறி மரண விசாரணையை நடாத்தினார்.

தொடர்ந்து சாட்சியமளித்த அவர், "சனிக்கிழமை காலை 7.20க்கு ராஜகிரிய முகாமிலிருந்து அதிரடிப் படையினர் அணி ஒன்று அமைச்சரின் இல்லத்துக்குப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காகச் சென்றது. அங்கிருந்து அமைச்சருடன் பாதுகாப்பாகப் பம்பலப்பிட்டி சென்றுகொண்டிருந்தனர்.

அவர்கள் தாம் செல்லும் பாதையின் விவரங்களை வானொலி மூலம் எமக்குத் தெரிவித்துக்கொண்டிருந்தனர். குண்டுச் சத்தத்தை யடுத்து வானொலித் தொடர்பு துண்டிக்கப்படவே நாம் விதைவிருக்குச் சென்றோம்.

அங்கே சில அதிரடிப் படையினர் காயமடைந்த நிலையிலும் மூவர் எரிந்து இறந்த நிலையிலும் காணப்பட்டனர். ஒரு அதிரடிப் படை வீரரின் சடலம் நூறு மீற்றர் தூரத்திற்கு அப்பால் எரிந்த நிலையில் இருந்தது" என்றார்.

அவர் இறந்த ஐந்து அதிரடிப்படை வீரரின் சடலங்களை அடையாளம் காட்டினார்.

பிரேத பரிசோதனை செய்த சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் சிட்னி பிரேமதிரட்ன தமது சாட்சியத்தில், 'குண்டு வெடிப்பினால் ஏற்பட்ட பல்வேறு காயங்களால் மரணம் சம்பவித்தது" என்றார்.

## இலங்கையரை மத்தியகிழக்குக்கு அனுப்ப ஏற்பாடு

மத்திய கிழக்கில் இருந்து நாடுதிரும்பியோரை மீண்டும் அங்கு கடமை புரிந்த நிறுவனங்களில் வேலை ஆரம்பிக்கும் போது அனுப்புவதற்கு வெளிநாட்டுவேலைவாய்ப்புப் பணியகம் நடவடிக்கை எடுத்துள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (74)

## இத்தாலிய பிரஜைக்கு 'எயிட்ஸ்' நாட்டைவிட்டு வெளியேற்றம்

நீர்கொழும்பு கடற்கரைக் கிராமத்தில் கண்டுபிடிக்கப்பட்ட 'எயிட்ஸ்' நோயாளியான இத்தாலிய பிரஜை நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டார்.

30 வயதான இவர் கடற்கரையில் இருவர்களுடன் சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடிய போது பொலிஸாரால்கைது செய்யப்பட்டார்

## மிதிவெடியில் 2 சிப்பாய் காயம்

திருமலை மாவட்டத்திலுள்ள சச்சிலம் பத்தை இராணுவ முகாமில் இருந்து பூநகர்ப் பகுதிக்கு இராணுவத்தினர் ரோந்து வந்தபோது விடுதலைப் புலிகள் வைத்திருந்த மிதிவெடியில் சிக்கி 2 இராணுவத்தினர் கால்களை இழந்துள்ளனர். (71)

## மகளிர் குழு கூட்டம்

யாழ் மாவட்டச் சிக்கனக் கடனுதவுக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச மகளிர் குழுவினரால் நடாத்தப்படும் சர்வதேச மகளிர் தினவிழா நாளை காலை 9.00 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற உள்ளது. கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (71)

---

ராஜீவ்...

உளவாளிகளின் நடவடிக்கைக்கும் துணைப்பிரதமர் தேவிலாலுக்கும் தொடர்பு இருப்பதாகப் புதுடில்லி வட்டாரங்கள் சந்தேகம் தெரிவித்திருந்தன

---

வடக்கே...

வழங்கப்படாததால் பல...

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



இலங்கேஸ்
பிறப்பு:
10. 08. 70

சலீம்
பிறப்பு:
25. 5. 68

## மேஜர் ஸ்ரீ

பிறப்பு: 17-07-1969 இறப்பு: 05.02.1991

விதி, என்போர் இவர்களா வர். (ப- 10)

## இந்தியப்...

நகை நி தெரிவிக்கும் தீர்மானம் நேற்று நண்பகல் இந்தியப் பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டபோது இந்திரா காங்கிரஸும் அதன் தோழமைக்கட்சிகளும் சபையிலிருந்து வெளிநடப்புச் செய்தன.

இதனால் பாராளுமன்றத்தில் அநேகமான ஆசனங்கள் வெறிச்சோடின ஒரு அமைச்சரும் ஐந்துக்கும் குறைவான உறுப்பினர்களுமே அவ்வேளை சபையில் இருந்தனராம்.

தமது ராஜினாமாவை அறிவித்து 8 நிமிடம் உரையாற்றிய சந்திரசேகர், இந்திரா காங்கிரஸ் தமக்கு அளித்த ஆதரவை விலக்கிக் கொள்வதால் தாம் தொடர்ந்தும் பதவியில் இருப்பதில் அர்த்தமில்லை என்றார்.

தற்போது நிலவும் நிட்சயமற்ற அரசியல் சூழலை நீக்க விரைவில் தேர்தலை நடாத்துமாறு திரு. சேகர் ஜனாதிபதியைக் கேட்டுக் கொண்டார். பிரதமரின் ராஜினாமாவை ஜனாதிபதி ஏற்றுக் கொண்டார்.

## காங்கிரஸின்...

இந்தியாவின் சிறுபான்மை அரசுகளுக்கு ஏற்படும் சதியே சந்திரசேகரின் ஆட்சிக்கும் ஏற்பட்டதாக எதிர் கட்சித் தலைவர் எல். கே. அத்வானி குறிப்பிட்டார்.

இது ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான் என பிரதமர் சந்திரசேகரின் ஆட்சி கவிழ்ப்பு குறித்து கருத்து வெளியிட்ட முன்னாள் பிரதமர் வி. பி. சிங் தெரிவித்துள்ளார்.

## தேர்தலில்...

தத்தை ஜனாதிபதியிடம் கொடுத்த பின்னர் செய்தியாளர்களிடம் உரையாற்றிய சந்திரசேகர் மேற்படி தகவலை வெளியிட்டார்.

''இந்திரா காங்கிரஸ் வேவு பார்த்த சிறு விடயத்தை பெரிதுபடுத்தி இந்தக் குழப்பத்தை ஏற்படுத்தி விட்டது. காங்கிரஸ் அரசு முன்வந்தால் எனது ஜனதாக்கட்சி அதற்கு ஆதரவளிக்க மாட்டாது. எமக்கு ஆதரவு தராத கட்சிக்கு நாம் ஏன் ஆதரவு கொடுக்க வேண்டும்'' எனவும் சந்திரசேகர் குறிப்பிட்டார்.

டாரங்கள் சந்தேகம் தெரிவித்திருந்தன

## வடக்கே...

வழங்கப்படாததால் பல கோடி ருபா நட்டம் சபைக்கு ஏற்படுவதாகவும், மனிதாபிமான முறையில் மின்சார விநியோகம் நடைபெறவேண்டும் எனவும் அவர் தமது கடிதத்தில் தெரிவித்துள்ளார். (70)


## சிறுவிளம்பரம்

### தவறிவிட்டது

கைப்பை ஒன்று, பெறுமதி மிக்க பொருள்களுடன், கல்வியங்காட்டுக்கும் (புரொக்டர் கனகரத்தினம் வீடு) நாயன்மார்கட்டுச் சந்திக்குமிடையில் (ஆடிபபாதம் வீதிச் சந்திப்பு) 3. 3. 91, ஞாயிறு காலை தொலைந்து விட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைக்கும்படி அன்புடன் கேட்கப்படுகிறார்கள். தகுந்த சன்மானம்வழங்கப்படும். 222 செம்மணி வீதி, நாயன்மார்கட்டுச் சந்தி, நல்லூர். 03043


# மேஜர் ஸ்ரீ

பிறப்பு: 17-07-1969 இறப்பு: 05-02-1991

தன்னுயிராம் இன்னுயிரைத்
தமிழர் தம் நாட்டுக்காய்
மண்ணுலகில் மாய்த்த நிதம்
மாவீரன் ஆனவனே
மன்னவனே கண்மணியே
மறத் தமிழர் மாதவமே
உன்னுயிரை உன்னினத்துக்
குவந்தீந்த உத்தமனே
பாசமாம் பற்றறுத்துப்
பறந்தோடிப் பகை நாடி
நீசர்களின் எதிர் நின்று
நிலங்காக்கப் போராடி
மாசரிய மாமணியே
வாசமலராம் "ஸ்ரீ" யே
வீசு புகழேந்தி
விண்ணுலகு புக்காயே

07. 03. 91ல் நடைபெறவிருக்கும் அந்தியேட்டிக் கிரியையில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

குறிப்பு: 5-2-91 அன்று தச்சன்காட்டு முகாம் தகர்ப்பில் ஈடுபட்டவர்களின் 31ஆம் நாள் நினைவஞ்சலி

உன்பிரிவால்வாடும்
அம்மா, சகோதர சகோதரிகள்,
உற்றார், உறவினர்கள்.

சாவகச்சேரி

70304


இப்பத்திரிகை முரசொலி பப்ளிகேஷேர்ஸ் (பிறைவேட்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு 'டச்சு வீதி, லக்ஷமிபில்டிங்'கில் உள்ள அச்சகத்தில் 07 - 03 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.